# யஜ்ஞோபவீதம்.

யஜ்ஞோபவீதம் என்பதற்கு நாம் சாதாரணமாக உபயோகிக்கும் சொல் பூணூல் என்பதாகும். உபநயனம் ஆன எல்லோரும் எப்பொழுதும் யஜ்ஞோபவீதம் போட்டுக் கொண்டு இருக்க வேண்டும். இதைத் போட்டுக் கொண்டு இருப்பதற்கும் சில விதிமுறைகள் உள்ளன.

யஜ்ஞோபவீதத்தை உபவீதம், நிவீதம், ப்ராசனாவீதம் என்று மூன்று விதமாக சந்தர்பத்திற்க்கு ஏற்றவாறு போட்டுக் கொள்கிறோம்.

**உபவீதம்:-** இடது பக்கத் தோளில் யஜ்ஞோபவீதம் இருக்குமாறு மார்பின் குறுக்கே போட்டுக் கொள்வது உபவீதம் எனப்படும். தெய்வத்துக்கு ப்ரீதியான செயல்களைச் செய்யும் பொழுது யஜ்ஞோபவீதத்தை உபவீதமாகப் போட்டுக் கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் நித்யம் செய்யும், அனைத்து தெய்வ காரியங்களிலும் மற்றும் த்ரிகால ஸந்தியாவந்தனம் செய்யும்போதும் யஜ்ஞோபவீதம் உபவீதமாக இருக்க வேண்டும்.

**நிவீதம்:-** மனிதன் மற்றும் மஹரிஷிகளின் ப்ரீதிக்காக செய்யப்படும் (ரிஷி தர்ப்பணம் போன்ற) கர்மாக்களில், கர்மாக்களைச் செய்யும் போது நிவீதம் என்ற முறையில் (அதாவது மாலையாக) போட்டுக் கொள்ள வேண்டும்.

**ப்ராசீனவீதம்:-** மறைந்த முன்னோர்க்ளுக்கு – பித்ரு தர்ப்பணம், ஸ்ரார்த்தம் முதலியவைகளைச் செய்யும்போது, யஜ்ஞோபவீதம் வலது பக்கத் தோளில் இருக்குமாறு, மார்புக்கு குறுக்கே போட்டுக் கொள்ள வேண்டும். இதற்கு ப்ராசீனவீதம் என்று பெயர்.

இது நம் அனைவருக்கும் தெரிந்த பொதுவான விஷயம். மேலும், சில விஷயங்களைப் பார்ப்போம்.

**யஜ்ஞோபவீதம் மாற்றிக் கொள்ள வேண்டிய சமயங்கள்:-**

1. அழுக்கு அதிகம் ஆகிவிட்டால்,
2. பூணூலின் ஒரு பகுதி அறுந்து விட்டால்,
3 .பூணூலில் நிறைய நூல்கள் சுற்றிக் கொண்டு விட்டால்,
4. பிறப்பு, இறப்புத் தீட்டு முடியும் நாளன்று,
5. தீட்டு உள்ளவர்கள் வீட்டுக்கு சென்று வந்தால்,
6. ஸ்ராத்திற்கு முன்பும்,
7. வபனத்திற்கு பிறகும்,
8. நான்கு மாதங்களுக்கு ஒரு முறையும்,

9. .நம்மை அறியாமல் தவறுதலாக நழுவி விழுந்து விட்டாலும், முறையாக மந்திரம் சொல்லி யஜ்ஞோபவீதத்தை மாற்றிக் கொள்ள வேண்டும்.
உடனடியாக மாற்றிக் கொள்ள முடியாத பட்சத்தில், யஜ்ஞோபவீதம் போல் தோளின் குறுக்காக, ஒரு துண்டைப் போட்டுக் கொள்ள வேண்டும். அடுத்த வேளை ஸ்ந்தியாவந்தனத்திற்குள் யஜ்ஞோபவீதத்தை மாற்றிக் கொள்ள வேண்டும்.

**மஹா பெரியவா வாக்கு:-** நாம் கிழக்கு முகமாக இருந்து கொண்டு தேவ காரியம் பண்ணும் போது, தேவர்களின் திசையான வடக்கு திசையைப் பார்க்க இருப்பது நம்முடைய இடது தோள்தான். அதனால்தான், தேவ காரியங்களில் யஜ்ஞோபவீதம் இடது தோள் மீது இருக்க வேண்டும் என்பது.

தேவ காரியம், பித்ரு காரியம் இரண்டும் செய்யாத வேளைகளில், அதாவது உத்யோக் வேளை முதலானதுகளிள் போது, யஜ்ஞோபவீதம் ஒரு தோளின் மேலேயம் இல்லாமல், கழுத்திலிருந்தே நீவிதமாக (மாலையாக) தொங்கவிட்டுக் கொள்ள வேண்டும். இதை யாரும் அனுசரிக்கக் காணோம். பித்ருக் காரியங்கள் தவிர மற்ற எல்லா சமயங்களிலும் இடது தோளிலேயே யஜ்ஞோபவீதத்தைப் போட்டுக் கொள்கிறார்கள்.

ஆதி சங்கர பகவத்பாதாள், " நீவிதம் மநுஸ்யாணம்" என்று சொல்லி இருக்கிறார். அதாவது, மநுஷ்யர்களுக்காள காரியத்திள் போது, யஜ்ஞோபவீதம் நீவிதமாக் இருக்க வேண்டும்.